## இலங்கையில் கொண்டுவரப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால்

## இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு

# இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்திட - உரிய தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## இந்தியப் பிரதமருக்கு — முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஜன.13-

**இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளைக் களைந்திட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலான ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசு இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரி, பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

### இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் நலன் — அரசியல் உரிமைகள்!

அக்கடிதத்தில், இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விஷயம் குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.


ஆழமான வரலாற்று, கலாச்சார மற்றும் உணர்வுப்பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்றும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது தனது கடமை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச்சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை எடுத்துரைக்கும் விரிவான கோரிக்கைகளை தாம் பெற்றுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### திட்டமிட்ட பாகுபாடு — வன்முறை!

இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கும் மேலாக, திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர் என்றும், பலர், இதனைத்தங்கள் சமூகத்திற்கு எதிரான இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது என்றும் முதலமைச்சர் அவர்கள் வருத்தத்தோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் அரசியலமைப்புகள் (1947, 1972, மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்புகள்) அனைத்தும் ஒரு ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன என்றும், இது திட்டமிட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறை மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது என்றும் தெரிவித்துள்ள அவர், உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருவதாக வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.



### ஒற்றையாட்சி அரசு!

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான, பாராளுமன்றத்தில் முழுப் பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம், இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி “எக்கிய ராஜ்ய” (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது என்றும், இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன்மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுவார்த்தைகளின்போது, தமிழ்ப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் (Thimpu Principles) குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில்,

- இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்);
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகமாக ஏற்றுக்கொள்வது(தமிழர் தாயகம்);
- தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை); மற்றும்
- மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்துக் குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல்;

போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன என்றும் முதலமைச்சர் அவர்கள், தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய அரசியலமைப்பும், அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும் என்றும், இது மீண்டும் மோதல்களுக்கும், மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டி யுள்ள முதலமைச்சர் அவர்கள், 1987-ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட, வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

### இலங்கைத் தமிழர்களின் அவல நிலை!

இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், இலட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர் என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இருதரப்பு உறவுகளுக்கும், இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டிற்கும் பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யும்; இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும்; மற்றும் பன்முகத் தன்மை, சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசியலமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப்போகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும், ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்கு அது பங்களிக்கும் என உறுதியாக தான் நம்புவதாகவும், முதலமைச்சர் அவர்கள், தாம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

### இன்னுயிரைவிடவும் தன்மானமும் தாய்நாட்டுப் பற்றும் பெரிதென வாழ்ந்த

# திருப்பூர் குமரன் புகழ் நாடெங்கும் பரவச் செய்வோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.13-

இன்னுயிரைவிடவும் தன்மானமும் தாய்நாட்டுப் பற்றும் பெரிதென வாழ்ந்த திருப்பூர் குமரன் புகழ் நாடெங்கும் பரவச் செய்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**காந்தியப் பாதையில் போராடி, அந்நிய ஆட்சியின் அடக்குமுறைகளை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு உயிர்துறந்த தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவுநாள்!**

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்ற தமிழர்களின் பெருமையைப் போற்றும் நாம், கொடி காத்த குமரன் அவர்களின் திருவுருவச் சிலையை ஈரோட்டில் நிறுவியதோடு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சாலைக்குத் ‘தியாகி குமரன் சாலை’ என்றும் பெயர் சூட்டியுள்ளோம்.**

**இன்னுயிரைவிடவும் தன்மானமும் தாய்நாட்டுப் பற்றும் பெரிதென வாழ்ந்த திருப்பூர் குமரன் அவர்களின் புகழ் நாடெங்கும் பரவச் செய்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

# சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர்!

### பொதுமக்கள் பாதிப்பு!

*சென்னை, ஜன. 13 -*

*சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் நிலவும் கடும் குளிரால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். இயல்புக்கு மாறான வானிலை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா தெரிவித்துள்ளார்.*

*கடந்த சில தினங்களாக சென்னை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. பொதுமக்கள் ஸ்வெட்டர், மஃப்ளர் சகிதமாக காலை, மாலை வேளைகளில் வலம் வருகின்றனர்.*

*விடுமுறைதினத்தில்கூட குழந்தைகள் அதிகம் வெளியில் விளையாடுவதை பார்க்க முடியவில்லை. இருசக்கர வாகனங்களில் செல்லும்போது, குளிர் நடுங்கச் செய்கிறது. சென்னை, புறநகர் பகுதிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்று மாறியது.*

*மெரினா கடற்கரைக்கு மாலை நேரங்களில் ஸ்வெட்டர் அணிந்துதான் மக்கள் வருகின்றனர். வீடுகளில் தரை ஐஸ்கட்டிபோல ஜில் என இருக்கிறது. இந்த கடும் குளிரால் இருமல், காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படுகின்றன.*

*இதுபோன்ற கடும் குளிர் நிலவுவதற்கான காரணம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா கூறியதாவது :-*

*2026 வரை ஜனவரி மாதத்தில் 21 முறை தான் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாகியுள்ளன.*

*இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றது. இது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக மன்னார் வளைகுடா அருகே நீடித்து வருகிறது. ஏற்கெனவே வட மாநிலங்களில் குளிர் அலையின் தாக்கம் உள்ளது.*

*மேலும், வளிமண்டல மேலடுக்குகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, வட மாநிலத்தில் நிலவும் குளிர் காற்று ஈர்க்கப்பட்டு வட தமிழகம் நோக்கி வருகிறது.*

*தெற்கு திசையில் இருந்தும் குளிர் காற்று வட தமிழகம் நோக்கி வருகிறது. கடந்த 4 நாட்களுக்கு மேலாக சூரிய ஒளியே வராத நிலையில், நிலத்தி லிருந்து வெளியேறும் வெப்பம் தடைபட்டு, பூமியும் குளிர்ச்சி அடைந்துள்ளது.*

*ரஷ்யா வழியாக சைபீரிய குளிர் அலையின் தாக்கமும் தமிழகம் நோக்கி வருகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் சென்னை உள்ளிட்ட வட தமிழக பகுதிகளில் குளிர் அதிகரித்துள்ளது. இது இயல்புக்கு மாறான வானிலையால்தான் ஏற்பட்டுள்ளது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

---



விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் வடக்கு ஒன்றியம் மேல் ஒலக்கூரில் பழங்குடியின மக்களுக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர்கள் அமுதா ரவிக்குமார்,சொக்கலிங்கம்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, இளம்வழுதி, மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.




“திராவிடப் பொங்கல் விழா 2026” விளையாட்டுப் போட்டிகள் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து பங்குபெற்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ம.ஜெயச்சந்திரன், மு.தங்கம், எம்.தேன்மொழி, காடுவெட்டி ஏழுமலை, கல்பட்டு வி.இராஜா, க.மும்மூர்த்தி, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், ஜெய.ரவிதுரை, வேம்பி.ஜெ.ரவி, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், அ.சா.ஏ.பிரபு, ஜெ.ஜெயபால், எஸ்.லூயிஸ், கு.தீனதயாளன், கை.ரா.சடகோபன், வே.கில்பர்ட்ராஜ் , பூக்கடை கணேசன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.